2024 ஜூன் 25]

விரைவாக அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியுமோ, அவ்வளவு விரைவாகத் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலம் வட்டம், கூகையூர் ஊராட்சியில் அமைந்துள்ள சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில் மிகவும் பழமை வாய்ந்த ஒரு திருக்கோயில். ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் வந்து செல்கின்ற ஒரு திருக்கோயில். இத்திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு 2008 ஆம் ஆண்டு இறுதியாக குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது அந்தத் திருக்கோயிலுக்கும் மாநில வல்லுநர் குழு, தொல்லியல் துறை மற்றும் மண்டலக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயிலாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றப் பிறகுதான், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வருமானம் இல்லாத திருக்கோயில்களுக்கு நிதியொதுக்கி—இந்த ஆண்டுகூட ரூபாய் 100 கோடியை ஒதுக்கீடு செய்து தந்திருக்கின்ற முதல்வர், திராவிட மாடல் அரசின் முதல்வர் நம்முடைய முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தின்படி, இந்த ஆண்டே இந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

90—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

***66503—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம், மண்ணிவாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஜூன் 3 ஆம் நாளை செம்மொழி நாளாக அறிவிக்கச் செய்த மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களது அனுமதியோடு செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம், மண்ணிவாக்கம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 703 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஏற்கெனவே 11 வகுப்பறைகள் உள்ள நிலையில், தற்போது CSR *நிதியின் மூலமாக கூடுதலாக 6 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதலாக 3 வகுப்பறைகள், கழிவறைகள் தேவைப்படுகின்றன. மேலும் நூலகம், ஆசிரியர் அறை, ஆசிரியர் கழிவறை போன்றவை தேவைப்படுகின்றன. நடைமுறையில் உள்ள அரசாணைகள், விதிமுறைகள் அடிப்படையிலும் உரிய முன்னுரிமையின் அடிப்படையிலும் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இப்பள்ளிக்கான கட்டடப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர்*

2024 ஜூன் 25]

ஒன்றியத்திற்குட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் சுமார் 800 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோலவே, தற்போது 6 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

அதைவிட, இப்போது அந்தப் பள்ளியில் தலையாய பிரச்சினை என்னவென்றால், அந்த உயர்நிலைப் பள்ளியிலிருந்து வருடந்தோறும் 140-லிருந்து 150 பிள்ளைகள் தேர்வாகி மேல்நிலைக் கல்விக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அப்போது அவர்கள் அருகிலுள்ள படப்பை அல்லது பெருங்களத்தூர் போன்ற பகுதிகளிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்குத்தான் சென்று சேர வேண்டியுள்ளது. அப்படிச் சேரும்போது அந்தப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் சேர்க்கைக்குப் பிறகுதான், இந்த மாணவர்களுக்குச் சேர்க்கையைக் கொடுக்கிறார்கள். அதனால், இந்த மாணவர்கள் தாங்கள் விரும்பிய group*-ல் இடம் கிடைக்காமல், அவர்கள் தனியார் பள்ளிகளில் கட்டணம் செலுத்தி சேரக்கூடிய ஒரு நிலை ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பள்ளியில் 11*th and *12*th*-ஐ கொண்டுவந்து பள்ளியைத் தரமுயர்த்தித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடங்கள் கேட்டு, இப்போது பள்ளியைத் தரமுயர்த்துவது பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் பொதுவான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. Groupwise சேர்க்கவேண்டும். ஏனென்றால், நிறைய பேருக்கு group கிடைக்காமல் போகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று நேற்றே அவர் தெரிவித்திருக்கிறார். கண்டிப்பாக வரும் காலத்தில் இதைச் சரிசெய்வதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அவர் சொன்னதுபோல, அந்தக் கட்டடங்களை உடனடியாகக் கட்டித் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

அதேபோல, நேற்றே என்னுடைய மானியக் கோரிக்கை விவாதத்தில் பள்ளிகளைத் தரமுயர்த்துவது குறித்த பிரச்சினைகளைப்பற்றி நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நிறைய பேர் பள்ளிகளைத் தரமுயர்த்துவதைத்தான் கேட்கிறார்கள். எனவே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து, அதற்கான உரிய நடவடிக்கையை வருங்காலத்தில் கண்டிப்பாக எடுப்போம் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும், எங்களுடைய செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சிப் பகுதியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று வேண்டுமென்பது, அந்தப் பகுதியினுடைய பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்றது. இதற்கும் ஒரு முக்கியமான reason என்னவென்றால், மறைமலை நகரில் மேல்நிலைப் பள்ளி இருந்தும், அந்தப் பகுதியில் உள்ள girls எல்லோரும் நந்திவரம் கூடுவாஞ்சேரியில் உள்ள Girls School–க்குதான் போகிறார்கள்.

இதனால் நந்திவரம் கூடுவாஞ்சேரி பள்ளியில் மாணவிகளுடைய எண்ணிக்கை இப்போது 3,000–க்கும் அதிகமாக இருக்கின்றது. எனவே, மறைமலை நகரிலேயே பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றை பெண்களுடைய முன்னேற்றத்திற்கு அயராது பாடுபடுகின்ற அரசாகத் திகழும் நமது திராவிட மாடல் அரசு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் அமைத்துத்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற